**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : திருமதி.கா.பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை**

**அ.வ.எண்.60/2025**

**(TNDG07-0000254-2025)**

1. திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர், அடிவாரம், குரும்பபட்டி ரோடு, திலகர் வீதி கதவிலக்கம் 159, சொர்ணத்தம்மாள் இல்லத்தில் வசித்து வரும் J.திருநாவுக்கரசு என்பவரின் மனைவி சுமார் 46 வயதுள்ள திருமதி.கவிதா.
2. திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர், அடிவாரம், குரும்பபட்டி ரோடு, திலகர் வீதி, கதவிலக்கம் 159, சொர்ணத்தம்மாள் இல்லத்தில் வசித்து வரும் J.திருநாவுக்கரசு என்பவரின் மகள் சுமார் 21 வயதுள்ள செல்வி.அபிராமி.
3. திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர், அடிவாரம், குரும்பபட்டி ரோடு, திலகர் வீதி, கதவிலக்கம் 159, சொர்ணத்தம்மாள் இல்லத்தில் வசித்து வரும் J.திருநாவுக்கரசு என்பவரின் மகன் சுமார் 15 வயதுள்ள மைனர். பார்த்திபன்.

(மைனர் 3-ம் வாதிக்கு தாயாரும், அடுத்த சினேகிதியுமான கவிதா என்பவர் மூலமாக)

--- வாதிகள்

// எதிர் //

திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர், அடிவாரம், குரும்பபட்டி ரோடு, திலகர் வீதி, கதவிலக்கம் 159, சொர்ணத்தம்மாள் இல்லத்தில் வசித்து வரும் J.ஜனார்த்தனன் என்பவரின் மகன் சுமார் 52 வயதுள்ள திரு.J.திருநாவுக்கரசு.

--- பிரதிவாதி

வழக்குச் சொத்தில் 2,3 வாதிகளுக்குரிய 2/3 பாகச் சொத்துக்களை பிரதிவாதி நலந்திகடு பார்த்து, கூட்டுச் சுவாதீனத்தில் இருந்து பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், தவறும்பட்சத்தில், நீதிமன்ற ஆணையர் மூலம் வழக்குச் சொத்தை மூன்று சம பாகங்களாகப் பிரித்து அதில் 2 பாகச் சொத்துக்களை 2,3 வாதிகளுக்கு வழங்கும் வகையில் இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், வழக்குச் சொத்தில் 2,3 வாதிகளின் பாகச் சொத்தை பிரதிவாதி பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கும்வரை வழக்குச் சொத்தை பிரதிவாதி வேறு நபர்களுக்கு கிரையம், ஒத்தி, ஈடு போன்ற பந்தக பராதீனங்களுக்கு உட்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கும்படி கோரியும்,

வழக்கு செலவு தொகையினை வாதிகளுக்கு, பிரதிவாதியை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மதிப்பு விபரம் :-** வழக்குச் சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரும் பாகப்பிரிவினை பரிகாரத்திற்கு தாவாச்சொத்தின் மொத்த மதிப்பு ரூ.8,25,000/-. அதில் வாதிகளுக்குரிய 2/3 பாகச் சொத்தின் மதிப்பு ரூ.5,50,000/-. அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.5000/- பிரிவு 37(2)-ன்படி கட்டப்பட்டுள்ளது.

வழக்குச் சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரத்திற்கு வாதிகளின் தாவா மதிப்பு ரூ.1000/-. அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.30/- பிரிவு 27(சி)-ன்படி கட்டப்பட்டுள்ளது.

தாவா மொத்த மதிப்பு ரூ.5,50,000+ரூ.1000=ரூ.5,51,000/-. மொத்த நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.5,000 + ரூ.30 = ரூ.5030/-.

வழக்குமூலம் : 14.11.1977 மற்றும் 28.09.2007.

வழக்கு தாக்கல் செய்த நாள் : 27.06.2024 மற்றும் 06.03.2025

இவ்வழக்கானது கடந்த 07.03.2025ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில் என் முன்பாக வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் P.காளிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் T.யுவராஜா அவர்கள் முன்னிலையாகியும், தாவா பிராதை நிராகரிக்கும்படி கோரி பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.2/2025 மனுவானது இன்று அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்பாணை

1. தாவா பிராதை நிராகரிக்கும்படி கோரி பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.2/2025 மனுவானது அனுமதிக்கப்பட்டது.
2. எனவே, இவ்வழக்கின் பிராது நிராகரிக்கப்படுகிறது.
3. செலவு தொகை பற்றிய உத்தரவு இல்லை.

## சொத்து விபரம்

திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், பழனி 1ம் எண் இணை சார்பதிவகம், பழனி நகர், சுவாமிமலை அடிவாரம், வார்டு எண்.3, பிளாக் எண்.20,

சன்னதி ரோடு மேல்சரகில் T.S.No.871 மற்றும் T.S.No.872–க்கு மொத்தம் சதுரடி 2924–ல் தென்கிழக்கு பக்கம் "சி" ஜாபிதா பாகம் கிடைக்கப்பெற்ற 330 சதுரடி உள்ள இடமும், அதில் கிழக்குப் பார்த்து கட்டியிருக்கிற பழைய மதராஸ் டெரஸ் மேல்மாடி கட்டிட வகையறாவும் சேர்ந்து. மேற்படி சொத்து தற்போதைய நத்தம் நிலவரி திட்டம் உட்பிரிவின்படி,

பட்டா எண்.4086 T.S.No.871/3 ஏர்ஸ் 0.0039.0
பட்டா எண்.4073 T.S.No.872/2 ஏர்ஸ் 0.0020.0

மேற்படி சொத்திற்கு நான்குமால்.

வடக்கு – T.S.No.871, 872 R.T.K.தங்கராஜ் சொத்து
கிழக்கு – சன்னதி ரோடு
தெற்கு – கருப்புச்சாமி கிரைய சொத்து
மேற்கு – T.S.No.871, 872 R.T.K.தங்கராஜ் சொத்து.

இதற்குள் 330 சதுரடி உள்ள இடமும், அதில் கிழமேல் ஜாதியடி வடபுறம் 25, தென்புறம் 25, தென்வடல் ஜாதியடி மேல்புறம் 10, கீழ்புறம் 10 இதற்கு 250 சதுரடி உள்ள இடமும், அதில் கீழ்தளம் சதுரடி 250–ல் கட்டியிருக்கிற மதராஸ் லாகட கட்டிடமும், முதல் மாடி கட்டிடமும், அதன் கதவு நிலவு கட்டுக்கோப்பு, மின் இணைப்பு பாத்தியமும் மற்றும் மேற்படி சொத்திற்கு ஏற்பட்ட சகல மாமூல் வழிநடை பாதைப் பாத்தியங்களும் சேர்ந்து. மேற்படி சொத்தின் மின் இணைப்பு எண்.330, வரிவிதிப்பு எண்.15942, கதவு எண்.133.

-----

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் நாளிட்ட தீர்ப்பாணையில் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.12 16:38:38 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**அ.வ.எண்.60/2025**

**திருமதி.கவிதா மற்றும் இருவர் – வாதிகள்**

**எதிர்**

**திரு.ஜே.திருநாவுக்கரசு – பிரதிவாதி**

**<u>மதிப்பு ச் சீட்டு</u>**

| | | |
|---|---|---|
| 1. வழக்கின் தன்மை | : | பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் |
| 2. சட்டப்பிரிவு | : | 37(2) மற்றும் 27(சி) |
| 3. வழக்கின் மதிப்பு | : | ரூ.5,50,000+ரூ.1000=ரூ.5,51,000/– |
| 4. நீதிமன்ற கட்டணம் | : | ரூ.5000+ரூ.30=ரூ.5030/– செலுத்தப்பட்டுள்ளது. |

உத்தரவுப்படி
(Sd/–) K.Gurumani.
தலைமை எழுத்தர்
கூடுதல் சார்பு நீதிமன்றம்,
பழனி.